# மிருதங்க அரங்கேற்றம்

கலாவித்தகர்

செல்வன்

## தருமராஜா துவாரகன்



இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

காலம் : 28.02.2016 ஞாயிற்றுக்கிழமை

மாலை 2.00 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மிருதங்க ஞானவாரி இசைமாணி திரு.சி.துரைராசா அவர்களின் மாணவனும்,
சென். ஜோண்ஸ் கல்லூரியின் பழைய மாணவனும்,
யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவப் பீட முதலாம் வருட மாணவனும்,
மிருதங்க கலாவித்தகருமான
திரு.திருமதி தருமராஜா - பாமா தம்பதிகளின் சிரேஸ்ர புதல்வன்

செல்வன் **தருமராஜா துவாரகன்** அவர்களின்

# மிருதங்க அரங்கேற்றம்

தலைவர்
**கலாநிதி செஞ்சொற்செல்வர் திரு. ஆறு திருமுருகன்**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில், இலங்கை.

பிரதம விருந்தினர்
**திரு.ஆ.நடராஜன்**
இந்தியத் துணைத்தூதர்
இந்தியத் துணைத்தூதரகம் – யாழ்ப்பாணம், இலங்கை.

சிறப்பு விருந்தினர்கள்
**திரு.தம்பிராசா குருகுலராசா**
கௌரவ அமைச்சர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரம்
வடக்கு மாகாணம்

**திரு.வே.வேதநாயகன்**
அரசாங்க அதிபர்
மாவட்டச்செயலகம் யாழ்ப்பாணம்.

**பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம்**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**வண. அருட்தந்தை N.J.ஞானப்பொன்ராஜா**
அதிபர், சென். ஜோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்

கௌரவ விருந்தினர்கள் :
**பேராசிரியர் T. வேல்நம்பி**
முகாமைத்துவப்பீடாதிபதி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**திரு. ந. தெய்வேந்திரராஜா**
யாழ். வலயக்கல்வி பணிப்பாளரும், வடஇலங்கை சங்கீதசபைத் தலைவரும்

**கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவநேசன்**
ஓய்வுபெற்ற விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**சங்கீத வித்துவான் திரு. பொன் ஸ்ரீ வாமதேவன்**
ஓய்வுநிலை இசை ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவின் ஆசிச்செய்தி



முதற்கண் என்னை இவ்வுலகில் ஈந்தளித்த எனது பெற்றோரையும் இக்கலைத் துறைக்கு என்னை வழிப்படுத்திய கலைத்தாயின் பாதங்களையும் பணிந்து இசைக்கலை வரலாற்றில் அன்று முதல் இன்று வரை நந்திவாத்தியம், மத்தளம், தண்ணுமை என்று சொல்லப்படுவது மிருதங்க வாத்தியமாகும். இவ்வாத்தியம், நடனம், இசை நிகழ்வுகளில் பிரதான பக்கவாத்தியமாக வாசிக்கப்படுகின்றது.

கலை என்பது இறைவனால் ஒருவனுக்கு கொடுக்கப்படும் கொடையாகும். இது எல்லோருக்கும் கிடைப்பதில்லை கிடைப்பினும் இதை எல்லோராலும் உணரமுடிவதில்லை. கலை மனிதனை வாழவைப்பது. மன அமைதிக்கு வித்திடுவது. நன்னெறிக்கிட்டுச் செல்வது என இன்னும் பலவற்றை சொல்லவல்லது. மன அழுத்தம், அமைதியின்மை நிறைந்த இன்றைய உலகில் ஒவ்வொருவரும் கலைகளில் நாட்டத்தைச் செலுத்துவது வரவேற்கத்தக்கது. அந்தவகையில் செல்வன் தருமராஜா துவாரகன் அவர்கள் மிருதங்கக் கலை மீது கொண்ட ஈடுபாட்டால் இன்று அவரது அரங்கேற்றம் கலை உலகில் அவரை அடையாளப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

என்னிடம் மிருதங்க இசையை ஆர்வத்துடன் பயின்றுவரும் பல மாணவர்களில் இவரும் குறிப்பிடத்தக்கவர். என்னிடம் மிருதங்கத்தினை பயில வந்த ஆரம்பகாலத்திலிருந்தே இவரிடம் இசைஞானமும் லயஞானமும் இருப்பதை என்னால் உணரமுடிந்தது. இதை முறையே அறிந்து மிருதங்கத்தினை பயில்வதற்கு பூரண ஒத்துழைப்பை புரிந்து ஊக்கமளித்த இவரது பெற்றோர்கள் மிகவும் பாராட்டத்தக்கவர்கள். மேலும் இவர் பல்வேறு விதமான இசைப்போட்டிகளில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் பரிசில்களைப் பெற்றுக்கொண்டதோடு வடஇலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தராதரத்தில் கலாவித்தகர் பட்டமும் பெற்றுள்ளார். கீழைத்தேய, மேலைத்தேய இசை கருவிகள் வாசிப்பதிலும் திறமை பெற்றுள்ளார்.

இதேபோன்று பல துறைகளிலும் தனது திறமைகளை வெளிப்படுத்தி வரும் செல்வன் துவாரகன் அவர்கள் இந்த அரங்கேற்ற ஆற்றுகையுடன் நின்றுவிடாது இத்துறையில் பல தேடல்களையும் பயிற்சிகளையும் நுணுக்கங்களையும் அறிந்து மென்மேலும் பல புதுமைகளை வெளிக்கொணர வேண்டும் என்பது எனது விருப்பமாகும். நிறைவாக ஒரு சிறந்த மாணவனுக்கு சிறந்த குரு அமைவது என்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல ஒரு சிறந்த குருவிற்கு தனது திறமைகளையும் வழிகாட்டல்களையும் மற்றும் கற்றல் கற்பித்தல் பயிற்சிகளையும் உள்வாங்கக் கூடிய சிறந்த மாணவன் அமைவது முக்கியமானதாகும். இவ்வாறான சிறந்த பண்புகளைக் கொண்ட துவாரகன் அவர்கள் இக்கலையில் மேலும் பல சாதனைகளை வெளிப்படுத்தி மேன்மை அடைய கலைத்தாயாகிய சரஸ்வதி மாதாவின் பாதங்களைத் தொழுது எனது நல்லாசிகளை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**இசைமாணி,**
**மிருதங்க ஞானவாரி திரு.சி.துரைராசா**

## அருளாசிச் செய்தி



கலா ரசிகப் பெருமக்களுக்கு!

செல்வன் தருமராஜா துவாரகனுடைய மிருதங்க அரங்கேற்றம் இன்று நடைபெறுவதை இட்டு மகிழ்ச்சியடைகின்றோம். வாத்தியக்கருவிதனில் மிருதங்க இசை நந்திதேவரால் பூவுலகிற்கு தரப்பட்ட அருஞ்சொத்தாகும். நான்கு சொற்களைக் கொண்ட தோல் வாத்தியங்களில் மிகவும் கடினமானதும் எளிமையான முறையில் இசைக்கக்கூடியதுமாகும். தாளத்தையும் இராகத்தையும் ஸ்ருதியையும் ஒன்றாக இணைத்த கலை. வாசிப்பவரையும் கேட்பவரையும் மனதையும் உடலையும் ஒரு நிலைப்படுத்துகின்றவையாகும். இக்கலையை துவாரகன் முறையாகப் பயின்று இன்று அரங்கேற்றுவது கலைக்கும், குருவிற்கும் செய்கின்ற அர்ப்பணமாகும். மிருதங்கக்கலையில் தனக்கென ஒரு இடத்தை வைத்திருக்கும் இசைமாணி சி.துரைராசா அவர்களை குருவாகக் கொண்டு இக்கலையை பயின்றது சிறப்பாகும். பல கலைஞர்களை உருவாக்குவதிலும் இளைய தலைமுறையினர்கள் இக்கலையை கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் விருப்பமுடையவர் துரைராசா ஆவார். இக்கலை வளர்ச்சியடையவும் தருமராஜா தம்பதியினரையும் துவாரகனையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். "என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹா சன்னிதானம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி



ஈழத்திருநாட்டில் மிருதங்க விற்பன்னர்களில் ஒருவராக விளங்கும் கலைஞர் மிருதங்க ஞானவாரி திரு.சி.துரைராசா அவர்களின் மாணவன் செல்வன் தருமராஜா துவாரகன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். நந்தி நலம் பெருமானின் நற்கலை வடிவமாகிய மிருதங்கக் கலையை சிறந்த விற்பன்னரிடம் முறையாகக் கற்று அரங் கேறுவது பெருமைக்குரிய விடயமாகும்.

தெய்வீகக் கலைகளைக் கற்பவர்கள் பாக்கியசாலிகள். துவாரகன் எதிர்காலத்தில் மிகச்சிறந்த கலைஞராக மிளிர இறைவனை வேண்டுகிறேன். அரங்கேற்றத்துக்குப் பின்பும் ஆழமாகக் கற்பவனே நல்ல கலைஞனாக சிறக்க முடியும். குருவின் ஆற்றல்படுத்துதலில் தொடர்ந்து அரங்க அறிவை வளர்க்க வேண்டும்.

கலை ஆர்வம் மிக்க பெற்றோரின் முயற்சியும் குருவின் தொடர் பயிற்சியும் துவாரகனை கற்றோர் சமூகம் அறிய வைத்துள்ளது. இவரது எதிர்காலம் சிறக்க இதய பூர்வமான ஆசிகளைச் சமர்ப்பித்து அமைகிறேன்.

**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்**
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்*

## ஆசியுரை



மிருதங்க ஞானவாரியும், இசைமாணியுமான திரு.சி.துரைராசா அவர்களின் மாணவனும், யாழ்.சென்.ஜோண்ஸ் கல்லூரியின் பழைய மாணவனும், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட முதலாமாண்டு மாணவனுமாகிய, யாழ். மண்ணின் மைந்தன் செல்வன் தருமராஜா துவாரகன், அவர்களின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு நிகழும் மன்மத வருடம் மாசித் திங்கள் 16 ஆம் நாள் 28.02.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சுபவேளையில் நிகழவுள்ளதையிட்டு, மிகவும் வெகு மகிழ்வடைவதுடன் குறித்த விழா நாயகன் செல்வன் த.துவாரகன் கீழைத்தேய, மேலைத்தேய இசைக்கருவிகள் பலவற்றையும் நன்கு வாசிப்பதில் ஆற் றல் வாய்ந்த இசைக்கலைஞராவார்.

இவர் பல மேடைகளில் பல விழாக்களில் தனது இசைப்புலமையையும் வித்துவத் தன்மையையும் வெளிக்கொணர்ந்து பலரதும் பாராட்டுக்களைப் பெற்ற இளம் கலைஞராவார். அவர் குறித்த மிருதங்க அரங்கேற்றம் வாயிலாக அவர் மென்மேலும் இசைத்துறையில் பல சாதனைகளைப் படைத்து நன்கு மிளிரவும். நீண்டநோயற்ற வாழ்வைப் பெற்று இஷ்ட சித்திகள் அடையவும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறி வாழ்த்தி அமைகின்றேன்.
"சர்வ ஜனகா சுகிகோப வந்து"

**சிவஸ்ரீ க.கிருபானந்தக்குருக்கள்**
*ஸ்ரீ இலஞ்சியாரணியம்*
*மண்டுவில் அம்மன் கோவில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி



மிருதங்க ஞானவாரி இசைமாணி திரு.சி.துரைராசா அவர்களின் மாணவனும் யாழ். பரி யோவான் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத் துறையின் முதல் ஆண்டு கற்கைநெறி மாணவனுமாகிய மிருதங்க கலாவித்தகர், செல்வன் தருமராஜா துவாரகன் அவர்களின் 28.02.2016 ஞாயிறு தினத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகின்ற மிருதங்க அரங்கேற்ற நிகழ்வுக்காக ஆசிச் செய்தியை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

செல்வன் தருமராஜா துவாரகன் இசைத்துறையில் மிகுந்த ஆர்வமுடையவர். வடமாகாணத்தில் வாழுகின்ற அவர் கலாவித்தகர் பட்டம் பெற்றபின் தன் இளம் வயதில் மிருதங்க அரங்கேற்றத்தை நிறைவு செய்கிறார். இவர் பல கீழைத்தேய மேலைத்தேய இசைக்கருவிகளையும் மீட்டுவதில் பாண்டித்தியம் பெற்றவர். "வானவில்" இசைக்குழுவின் இயக்குனர் இதன் மூலம் சமூகத்தின் மாணவர்களின் கல்விப் பணிக்கு உதவுபவர். தனது கல்வியை ஆங்கில மொழியில் கற்று தேர்ந்தவர். இவர் ஈழத்தின் சிறந்த இசைக்கலைஞராக மென்மேலும் உயரங்களை எட்டிச் சிகரங்களை அடைய மனமார வாழ்த்து கின்றேன். இவருக்கு இச்சிறப்புக்களை நிறைவாக வழங்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி படைக்கிறேன்.

எமது இசை கலை கலாசாரங்களை அடுத்த சந்ததியினருக்கும் இவர் எடுத்துச் செல்ல இறைவனை வேண்டுகிறேன். இசை மனித இனத்திற்குக் கொடுக்கப்பட்ட கடவுள் அருட்கொடை. இசையால் மயங்காத உயிர்கள் இல்லை. இறைவனும் இசைக்கு மயங்குபவர். இறைவன் அவருக்கு நிறை ஆசிகளை வழங்கி அவரை தம்வாழ்வில் முழுமையாக வழிநடத்த இறைமகன் இயேசுக் கிறிஸ்துவின் திருப்பெயரால் வேண்டுகிறேன்.

அமெரிக்க இலங்கை மிஷன் திருச்சபையின் சார்பாக அவரையும் அவர் குடும்பத்தினரையும் வாழ்த்தி இறைவனைப் பிரார்த்தித்து இம்மடலை நிறைவு செய்கிறேன்.

*கிறிஸ்துவின் பணியில்,*
**வண.ஈனோக் பூ.புனிதராஜா**
*அமெரிக்க மிஷன் திருச்சபை குரு முதல்வர்,*
*இலங்கை*

## ஆசிச் செய்தி



பரந்து விரிந்த உலகின் பாரம்பரியங்கள் நிலைத்தோங்க தமிழ்ப் பண்பாட்டுக் கலாசார விழுமியத்தின் தழைத்தோங்கலில் தனிச்சிறப்புப் பெற்றிட்ட மாண்மியப் புதல்வர் செல்வன் தருமராஜா துவாரகன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெறும் இந்நன்னாளிலே மிருதங்க ஞானவாரியும் இசைமாணியுமான திரு.துரைராசா அவர்களின் மாணவனாக ஒளிர்ந்து யாழ் சென் ஜோண்ஸ் கல்லூரியிலே கல்வியதில் மிளிர்ந்து பழைய மாணவனாக வலம்வந்து முகாமைத்துவ மாணவனாக யாழ் பல்கலைக்கழகத்தில் வலம் வரும் மாணவரே, கலாவித்தகரே செல்வன் தருமராஜா துவாரகன் அவர்களே.

நீங்கள் கீழைத்தேய மேலைத்தேய வாத்தியங்களை திறம்பட வாசிக்கும் இசை ஒலியின் அலையுடன் இன்னும் இன்னும் பற்பல கலைகளை கற்று இசையின் அசைவால் சமூகத்திற்கும் நாட்டிற்கும் வீட்டிற்கும் இன்னும் பல பல பெருமைகளையும் புகழ்களையும் சேர்த்து சகலகலா வித்துவானாக வளர்ந்திட வல்ல இறைவனை இருகரம் ஏந்தி பிரார்த்தித் துக் கொள்கின்றேன்.

வாழட்டும் வளரட்டும் நின் கலை வாழ்வு!
அல்ஹம்து வில்லாஹ்! ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்

**"அல்ஹாஜ" ஏ.எம். அஸீஸ் மௌளவி (காஷிமி)**
*யாழ்/கிளி. மாவட்ட உலமா சபை*
*சர்வ மதத் தலைவர்,*
*யாழ். மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசீர்வாத வாழ்த்துக்கள்



இந்த ஆசீர்வாத வாழ்த்துக்கள் பெறுகின்ற கலாவித்தகர் தருமராஜா துவாரகன் அவர்கள் மிகவும் சங்கீதத்தில் பிரபல்யம் பெற்றவர். இவர் எமது நாட்டில் மிருதங்க இசைத்துறையில் சிறந்த வித்துவானாக வருவதற்கு எல்லா தகமைகளும் பெற்றுள்ளார். இவரை யாழ்ப்பாண நாகவிகாரை ஆமத் குருமார்கள் யாவரும் இசைத்துறையில் மென்மேலும் உயர்வடைய வேண்டுமென கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

**கலைமாணி மீகா ஜந்துரே ஸ்ரீ விமல தேரர்**
*விகாராதிபதி*
*நாக விகாரை*
*யாழ்ப்பாணம்.*

## ஆசிச் செய்தி



கலை உலகில் இன்று எமது கல்லூரி மாணவன் அரங்கேறுகிறான் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழர் எம் பாரம்பரிய இசைக்கருவிகளில் தொண்மையும், தண்மையும், நுண்மையுமான ஆனந்த லய வாத்தியம் மிருதங்கம் ஆகும். இவ்வாத்தியத்தினை மிருதங்க வித்துவான் திரு.சி.துரைராசா என்பவரிடம் முறைப்படி கற்று வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தரப்பரீட்சையில் முதன்மை சித்தி பெற்று இன்று தான் கற்ற வித்தையினை அதன் பால் கிரகிக்கப்பெற்ற அனுபவங்களை ஒருமித்த கலைஞர்கள் சான்றோர்கள் முன் அறிமுகப் படுத்தும் நிகழ்வே அரங்கேற்றம்.

செல்வன் த.துவாரகன் அவர்கள் சென்.ஜோண்ஸ் கல்லூரியில் கல்விகற்று நல்ல பெறுபேற்றுடன் பல்கலைக்கழக கற்கை நெறியைத் தொடர்கின்றார். இவர் கல்வி கற்கின்ற காலத்தில் நல் ஒழுக்கம், கல்வியில் மட்டுமன்றி தனது கலை ஆற்றலினால் கல்லூரி அரங்கை அலங்கரித்தவராவர். அது மட்டுமன்றி இரு தடவைகள் தேசிய மட்டத்திலும் வெற்றி வாகை சூடி கல்லூரித் தாய்க்குப் பெருமை சேர்த்த மாணவனாவார். இன்று எமது இனத்துவத்தின் தனித்துவமான அடையாளங்கள் பல மறைந்தும், மறந்தும் காணப்படுகின்ற சூழலில் வளம்படுத்த வேண்டிய பெற்றோர்களும் தமது சுய கௌரவத்திற்காக கல்வியே முழுமையான வாழ்கையாக வழிப்படுத்துகின்றனர். ஆனால் வாழ்வின் நிறைவு என்பது பல அலகுகளோடு ஒன்றிணைந்தது. அந்த வகையில் துவாரகனின் பெற்றோர்கள் தமது பிள்ளையை சிறந்த முறையில் நெறிப்படுத்தி இருப்பது ஏனைய பெற்றோருக்கும் முன் மாதிரியான செயற்பாட்டுடன் பாராட்டுக்கு உரியதாகும்.

அரங்கேற்றம் காணும் துவாரகன் இயல்பாகவே கலை ஞானம் உடையவர். இவர் மேலும் கலைத்தேடல் உடையவராக நிறைவான நல் ஆசிகளை வழங்கி மகிழ்கிறேன்.

**வண.என்.ஜே.ஞானப்பொன்ராஜா**
*அதிபர்,*
*யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி



மிருதங்க ஞானவாரி இசைமாணி சி.துரைராசா அவர்களின் மாணவனும், சென் ஜோண்ஸ் கல்லூரியின் பழைய மாணவரும் திரு.திருமதி தருமராஜா தம்பதியினரின் புதல்வனும் ஆகிய கலாவித்தகர் திருநிறைச்செல்வன். த.துவாரகன் அவர்களுடைய மிருதங்க அரங்கேற்றத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று மிருதங்க அரங்கேற்றம் காணும் செல்வன் துவாரகன் அவர்கள் எமது தூதரக கலை நிகழ்வுகளில். ஏற்கனவே தபேலா மற்றும் கஞ்சிரா போன்ற வாத்தியக்கருவிகளுடன் எமக்கு அறிமுகமாகியிருந்தார். மிருதங்கம்,கீபோட், ஒக்ரபாட். ட்ரம். தபேலா. மோர்சிங். கடம். கஞ்சிரா. தவில். கிற்றார் போன்ற பத்து இசைக்கருவிகள் வரை வாசிக்கும் திறமையைப் பெற்றவராகவும் இவர் விளங்குவது எம்மையெல்லாம் ஆச்சரியப்பட வைக்கின்றது. இந்தச் சிறு வயதிலேயே இத்தனை இசைக்கருவிகளை கற்று அதனைச் சிறந்த முறையில் கையாளத்தெரிந்த ஒரு மாணவனைச் சந்திப்பது எனது வாழ்க்கையிலேயே இதுவே முதல் தடவையாகும். இப்படித் திறமையான ஒரு புதல்வனை இந்த இசை உலகிற்கு வழங்கிய தாய் தந்தையருக்கு இசை உலகின் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்


ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்

எனும் வள்ளுவன் குறளுக்கு வரைவிலக்கணமாக விளங்கும் வகையில் செல்வன் துவாரகனுக்குச் சிறந்த தந்தையாக திரு.தருமராஜாவும், தாய், தந்தையர்க்கு பெருமை சேர்க்கும் சிறந்த புத்திரனாக திருநிறைச்செல்வன் த.துவாரகன் அவர்களும் விளங்குகின்றனர். இவர் தன் இசைச்சேவை மூலமாக இலங்கைக்கு மட்டுமில்லாது முழு இசை உலகிற்கும் சிறந்த சேவையாற்றி எதிர்காலத்தில் ஒரு மிகப்பெரிய இசைஞானி, இசைவித்துவானாக விளங்கவும், பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழவும் இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**ஆ.நடராஜன்**
*இந்தியத் துணைத்தூதர்,*
*யாழ்ப்பாணம், இலங்கை.*

## முதலமைச்சரின் வாழ்த்துரை



செல்வன் தருமராஜா துவாரகன் இன்று மிருதங்க அரங்கேற்றம் மேற்கொள்வதை இட்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன். வடபகுதியில் மிருதங்க இசையைத் தனக்கே உரிய விசேட பாணியில் கைக் கொண்டிருக்கும் திரு.சின்னையா துரைராசா அவர்களின் மாணவனாக மிருதங்கக் கலையை எதுவித குறைவுமின்றி முழுமையாகக் கற்றுத்தேறி கலாவித்தகர் பட்டத்தினையும் பெற்ற பின்னர் முழுமையானதொரு மிருதங்க வித்துவானாகச் செல்வன் தருமராஜா துவாரகன் இன்று தனது அரங்கேற்றத்தை மேற்கொள்ளுகின்றார்.

இவர் மிருதங்க வாத்திய கலையுடன் மட்டும் நின்றுவிடாது கீபோர்ட். ஒக்ரோபாட். தபேலா. கெஞ்சிரா. கடம். மோர்சிங். தவில். ட்ரம். கிற்றார் ஆகிய பத்து விதமான இசைக்கருவிகளைக் கையாளும் ஆற்றலை கொண்டிருப்பதுடன் வாய்ப்பாட்டிலும் சிறந்து விளங்குவது எம்மை மலைக்க வைக்கின்றது. யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் மாணவனாகக் கல்வி கற்று வந்த இவர் கா.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் சிறப்பான சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு முகாமைத்துவ கற்கைநெறிக்கு தெரிவாகியுள்ளமை இன்னோர் சிறப்பம்சம் ஆகும். இவருக்கு எல்லா அருட்கடாட்சங்களுங் கிடைக்க இறைவனை வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
*முதலமைச்சர், வட மாகாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



ஆயகலைகளில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக மிருதங்கக்கலை காணப்படுகிறது. ஆடலுடன் பாடலும் அதற்கேற்றவாறு தாளமும் இணையும் கண்ணுக்கு குளிர்ச்சியையும் மனதிற்கு ரம்மியத்தையும் தருகின்றது.

கலைகள் ஒருவரை ஆட்கொள்வதென்றால் கலைவாணியின் அருட்கடாட்சம் அவர்மீது பொழிகின்றது என்பதே உண்மை.

எல்லோரும் கலைகள் மீது தமது ஆட்சியை செலுத்திவிட முடியாது. செல்வன் துவாரகன் சிறுவயது முதலே மிருதங்கம் பயின்று இன்று தனது திறனை அரங்கேற்றம் மூலம் வெளிப்படுத்தவுள்ளமையையிட்டு மகிழ்வதோடு. அரங்கேற்றம் சிறப்புற நடைபெறவும் மேடைகள் பலதும் இவரின் ஆளுகைக்குட்பட்டு பிரகாசிக்க எனது நல்வாழ்த்துக் களை வழங்குவதோடு கலைதேவியின் அருள் இவருக்கு கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**திரு.த.குருகுலராசா**
*கௌரவ கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்*
*இளைஞர் விவகார அமைச்சர்,*
*வடக்கு மாகாணம்.*

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



செல்வன் தருமராஜா துவாரகன் கலாவித்தகராக மிருதங்க அரங்கேற்றம் நடாத்தும் இவ்வேளையில் அவரது மிருதங்க அரங்கேற்றம் சிறப்புற அமைய வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கலைகள் மனிதனை முழுமனிதனாக்குகின்றது. என்னும் கருத்துக்களுக்கு அமைய துவாரகன் பல்கலைக்கழக கல்வியோடு மிருதங்க கலாவித்தகராக விளங்குவதும் இரட்டை சிறப்புகளுக்குரியதாகும்.

மிருதங்க ஞானவாரி திரு சி.துரைராசாவின் மாணாக்கனாக விளங்கும் செல்வன் துவாரகன் சென். ஜோண்ஸ் கல்லூரியின் பழைய மாணவராகவும் விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது. கல்வி, ஒழுக்கம், கலைகள் மனிதனை சிறந்த சிற்பியாக உருவாக்குபவை. அதன் அடிப்படையில் மாணவனாக விளங்கும் இவர் சமூகத்திற்கு கலைகள் ஊடாகவும், கல்வியின் ஊடாகவும் சிறந்த பணியை மேற்கொள்ள என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா.வேதநாயகன்**
*அரசாங்க அதிபர்,*
*யாழ் மாவட்டம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் சென். ஜோண்ஸ் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீட புதுமுக மாணவனுமாகிய திரு.த.துவாரகன் அவர்களுக்கு இன்று நடைபெறும் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்கள் புத்தகப் பாடங்களை கற்பதோடு மட்டும் நின்றுவிடாமல் பல்துறை சார்ந்த கற்றல் தேடல்களையும் மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய சுதந்திரமான கற்றல் செயற்பாடுகளை மாணவர்கள் பொறுப்புடன் செயற்படுத்துவது வரவேற்கத்தக்கது. இதற்கு செல்வன் துவாரகன் ஓர் உதாரணமாகும். இவரது ஆக்கபூர்வமான முயற்சியினைப் பாராட்டுகின்றேன்.

செல்வன் துவாரகன் சிறுவயதிலிருந்து உயர்தரக் கல்விவரை மிகவும் ஆர்வத்தோடு கற்று தனது திறமைகளை வெளிப்படுத்தியதுடன் தற்போது பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீடத்திற்கு அனுமதி பெற்றிருக்கும் நிலையில் கலைத்துறையில் மிருதங்க வாத்தியத்தினைக் கற்று வடஇலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் திறம்பட சித்தியெய்தி “கலாவித்தகர்” என்ற பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் இசைத்துறையில் மிருதங்கத்தை மட்டுமன்றி ஏனைய வாத்தியங்களையும் வாசிக்கும் திறமை பெற்றுள்ளமை மிகவும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். தனது சொந்தப் பாடல்களையும் இசையமைத்து வெளியிட்டு வருவதுடன் பல்வேறு போட்டிகளிலும் கலந்துகொண்டு பரிசில்களை பெற்று தனது இசைத்திறமையை சிறுவயதிலிருந்து வெளிப்படுத்தி வருகின்றார்.

மேற்குறிப்பிட்டவாறு திரு.துவாரகன் தனது உயர்கல்வியை சிறந்தமுறையில் தொடர்வதுடன் இசைத்துறையிலும் மென்மேலும் வளர்ச்சியும் புகழும் பெற்று எதிர்காலத்தில் எமது பிரதேசத்தில் இசைத்துறைக்கு சிறந்த பணியாற்ற எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்**
*துணைவேந்தர்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

## பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



செல்வன் தருமராஜா துவாரகன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். மிருதங்கக் கலையைத் தெய்வீகக் கலையாகப் போற்றி அதனை பக்தியுடன் பயின்று இன்று தனது அரங்கேற்றத்தினைச் செய்கின்ற செல்வன் தருமராஜா துவாரகன் அவர்கள் தனது கல்வியை யாழ். பரியோவான் கல்லூரியில் கற்று தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் மாணவனாகத் தன்னை இணைத்துள்ளார்.

இவரை மிகத் திறமையாக பயிற்றுவித்த ஆசிரியருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு அவரது சேவை மேலும் சிறக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன். அத்துடன் செல்வன் தருமராஜா துவாரகன் அரங்கேற்றத்தின் போது தமது திறமைகளை வெளிக்காட்டி பார்வையாளர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறுவார் என்பதில் ஐயமில்லை. இவரின் அரங்கேற்றம் மிகச் சிறப்பாக இடம்பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் அவரை இந்நிலைக்கு உயர்த்திய பெற்றோர்களையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

**பேராசிரியர் தி.வேல்நம்பி**
*பீடாதிபதி*
*முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச்செய்தி



செல்வன் தருமராஜா துவாரகனின் மிருதங்க அரங்கேற்றத்துக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். இசைமாணி மிருதங்க ஞானவாரி திரு.சி.துரைராசா அவர்களின் மாணவர் என்பதையிட்டு இம்மாணவன் பெருமைப்பட முடியும். ஒவ்வொரு மனிதனும் கலைத் துறையில் ஆகக்குறைந்தது ஏதாவதொரு பிரிவில் ஈடுபாடும் புலமையும் பெற்றிருப்பது அவசிய மானது. மன அமைதிக்கும் உள நலனுக்கும் கலை உணர்வு இன்றியமையாதது. இப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட ஆசிரியர்களும், மாணவர்களும் கொடுத்து வைத்தவர்கள் என்பது எனது தாழ்மையான கருத்து. எனது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**ந.தெய்வேந்திரராஜா**
*யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரும்*
*வட இலங்கை சங்கீத சபைத்தலைவரும்*

## வாழ்த்துச்செய்தி



மிருதங்க ஞானவாரி திரு.சி.துரைராசா அவர்களின் மாணவனும் திரு.திருமதி.தருமராஜா தம்பதிகளின் செல்வப் புதல்வனுமான செல்வன் துவாரகன் அவர்களின் மிருதங்க அரங்கப் பிரவேசத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆயகலைகள் 64 கினுள் நுண்கலைகள் அதிசிறப்பும் உன்னதமானதுமாகும். அப்படிப் பட்ட நுண்கலைகளில் ஒன்றினையேனும் மனிதவாழ்வில் பயின்றிருப்பது ஒவ்வொருவரினதும் கடமையும் ஆத்மதிருப்தியுமாகும். கலை என்பது மனிதனை வாழவைப்பதும், நல்ல கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதுமாகும்.

அத்துடன் மன அமைதிக்கும், மன அழுத்தங்களிலிருந்து ஆற்றுப்படுத்தவும், சிறந்த ஆளுமையுள்ள தலைமை தாங்கும் பண்புள்ளவனாகவும், சமூகத்தில் நற்பிரஜைகளாக வளர்க்கவும் கலைகள் உதவுகின்றன. அதிலும் இளைய தலைமுறையினர் தம்மனதை கலைகளில் ஈடுபடுத்துவது நல்லதொரு சமுதாய உருவாக்கத்திற்கு வித்திடும். அந்த வகையில் செல்வன் தருமராஜா துவாரகன் அவர்கள் மிருதங்கக் கலைமீது கொண்ட ஈடுபாட்டால் இன்று அவரது அரங்கப் பிரவேசம் கலையுலகில் அவரை அடையாளப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் செல்வன் அவர்களின் குரு இசைமாணி திரு.துரைராசா அவர்கள் நாடறிந்த சிறந்த மிருதங்க வித்துவானும் சிறந்த ஆசிரியருமாவார். அவரைத் தெரியாதோர் கலையுலகில் இருக்கமுடியாது. அவரிடம் நீண்ட நாட்கள் பயிற்சி பெற்ற செல்வன் அவர்கள் கல்வியில் க.பொ. த.உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றைப்பெற்று யாழ் பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பிரிவில் பயிலும் மாணவனுமாவார். அவரது கலைப்பயணம் பெற்றோரினது விருப்பினாலும் குருவின் சிறந்த வழிகாட்டலினாலும் ஆசிரிய தராதரப் பரீட்சையிலும் தேர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே அவரது அரங்கப் பிரவேசம் சிறப்புற அமையும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. கலை உலகில் தன்னை அடையாளப்படுத்தி பெற்றோருக்கும், குருவிற்கும் நாட்டிற்கும் நற் பெயரைப் பெற்றுக்கொடுக்க எல் லாம் வல்ல இறையருள் கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

"வாழ்வு வளமுடைத்து வளர்கலை பெரிது"

**கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்**
*ஓய்வுநிலை விரிவுரையாளர்*
*கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.*

## வாழ்த்துச்செய்தி



அரியாலைப் பெரும்பதியின் திரு.தருமராஜா துவாரகன் அவர்கள் தமது பாடசாலைக் கல்வியை யாழ்.பரியோவான் கல்லூரியில் மேற்கொண்டார். உயர்தர வர்த்தகப் பிரிவில் விசேட சித்தியை பெற்றுக் கொண்ட இவர் முதலாம் வருட முகாமைத்துவ மாணவராக யாழ்.பல்கலைக்கழகத்தில் பயின்று வருகின்றார். இவரது பெற்றோருக்கும் இவருக்கும் இருந்த கலை ஆர்வத்தின் காரணமாக இசைக்கலைமாணி, மிருதங்கஞானவாரி சி.துரைராசா ஆசிரியரிடம் மிருதங்க மாணவனாக சேர்ந்தார்.

சுமார் 16 வருடங்களாக மிருதங்கத்தைப்பயின்று பலவிதமான நுட்பங்களையும் அறிந்த ஆற்றுகை திறனுடையவராக மிளிர்கின்றார். இதன் காரணமாக பெற்றோர் இவருக்கு அரங்கேற்றம் நிகழ்த்த விரும்பி ஆசிரியரை அணுகியபோது, அவரும் மகிழ்ச்சியுடன் அரங்கேற்றத்துக்கான ஆயத்தங்களை செய்து முடித்தார். இன்று இந்த மேடையில் அரங்கேற்ற நாயகனாக திகழும் செல்வன் துவாரகன் அவர்கள் ஒரு தலைசிறந்த பிரபல வித்துவானை பாடகனாகக் கொண்டு தனது 1வது ஆற்றுகையை நிகழ்த்துகிறார். தொடர்ந்து ஆசிரியரிடம் பயின்று பல பல மேடைகளில் தனது ஆற்றுகை நிகழ்த்தி கீர்த்தியையும் பாராட்டுக்களையும் பெற இறையருளை வேண்டி இந்நன்நாளில் எனது இதய பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**பொன் ஸ்ரீ வாமதேவன்**
*ஓய்வுநிலை இசையாசிரியர்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலாவித்தகர் செல்வன் தருமராஜா துவாரகன் அவர்களின் பெற்றோர்களே இங்கு சிறப்பான விதமாகப் பாராட்டப்பட வேண்டியவர்கள்



திரு. திருமதி. தருமராஜா பாமா தம்பதிகளின் சிரேஸ்ர புதல்வன் கலாவித்தகர் செல்வன் தருமராஜா துவாரகன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் பற்றி அறிந்து மன நிறைவோடு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மிருதங்க ஞானவாரி இசைமாணி திரு சி.துரைராசா அவர்களின் மாணவன் செல்வன் தருமராஜா துவாரகனின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு சிறப்புடன் நடைபெற இறை ஆசிகளை வேண்டி நிற்கிறேன்.

ஏறக்குறைய 16 ஆண்டுகள் கவனத்தோடும் நிதானத்தோடும் பொறுமையோடும் மிருதங்கக் கலையைக் கற்றுத் தேர்ந்து கலாவித்தகர் பட்டத்தினைப் பெற்று இன்று மகிழ்வோடு அரங்கேற்றம் செய்யும் நிலையை அடைந்து தமது ஆசானுக்கும் பெற்றோருக்கும் தம் கல்விக்கூடத்திற்கும் பெருமை சேர்த்திருக்கிறார். இவர் மேலும் மேலும் வளர்ந்து சாதனைகள் பல படைத்து வரலாற்றில் இவர் பெயர் பதியப்பட வாழ்த்தி நிற்கிறேன்.

இவர் தன் கலைப் பயணத்தோடு கல்வியிலும் கவனமாக இருந்து பல்கலைக்கழகம் நுழைந்துள்ளமை இவர் போன்று பல்துறைகளில் ஈடுபடுபவர்கள் அவற்றோடு கல்வியிலும் வெற்றிபெற முடியும் என்ற முன்னுதாரண பாடத்தை சொல்லித் தருகிறது. இவரின் இந்த செயற்பாடானது இவரின் கல்விக்கூடமான சென். ஜோண்ஸ் கல்லூரிக்கும் புகழ் சேர்க்கிறது.

இவர் போன்ற இளவயதினர் இவ்வாறு தம் நேரத்தை பயனுள்ள விதமாக முழுமையாகப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேறவும் சாதனை படைக்கவும் வேண்டும். இவரின் இந்த முன்மாதிரிகையை இன்னும் பலர் பின்பற்ற வேண்டும் என அன்பு வேண்டுகோள் விடுக்கிறேன்.

இங்கு சிறப்பான விதமாகப் பாராட்டப்பட வேண்டியவர்கள் இவரின் பெற்றோர்களே. இவர்கள் தம் மகனைச் சிறப்பான விதமாக வளர்த்து - இவரின் தனிப்பட்ட திறமையை இனங்கண்டு - அதில் அவர் முன்னேறுவதற்கு உதவி செய்து நெறிப்படுத்தியுள்ளனர். இவரும் தனது பெற்றோரின் வழிகாட்டுதலை ஏற்று அதன்படி வளர்ந்து சாதனை படைத்து தலைநிமிர்ந்து நிற்கிறார்.

சிறு வயதில் தம் பிள்ளைகளை உரிய விதமாக நெறிப்படுத்தி வழிகாட்டி வளர்க்காத பெற்றோர்களே பின்னர் பெருஞ் சஞ்சலத்திற்குள்ளாகின்றனர். சிறு வயது முதல் உரிய விதமாக நெறிகாட்டி வளர்க்கப்பட்ட பிள்ளைகள் வளர்ந்த பின்னர் நெறிதவறிப் போகமாட்டார்கள் என்பது உண்மையாகும்.

இவ்வாறு சிறுவயதில் இருந்து பெற்றோர் பிள்ளைகளை உரிய பராமரிப்புடனும் அன்பான கரிசனையுடனும் தேவையான வழிகாட்டலுடனும் வளர்ப்பார்களானால் இன்று தமிழ்ச்சமூகம் எதிர்நோக்கும் பல பிரச்சனைகள் இல்லாமலே போய்விடும். எங்கே போவதென்று தெரியாமலேயே எம் இளைஞர்களில் பலர் எங்கேயோ போய்விடுகின்றனர். வழிகாட்டி வளர்க்கப்பட்டவர்கள் வழிதவறிப்போக மாட்டார்கள்.

இவர் தன் கல்வியோடு இசைத்துறைப் பயணத்தை மேற்கொண்டதோடு தமது கச்சேரிகளின்வழி பல உதவிப் பணிகளையும் செய்துள்ளார் என்பதை அறிந்து மகிழ்ந்தேன். இது கூட இவரின் பெற்றோர்களின் வழிநடத்துதலாக இருக்கும்.

பல்கலைக்கழகத்தில் உங்கள் கலைத் துறையோடு சேர்ந்த ஒரு துறை கிடைத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் இல்லையா? என செல்வன் தருமராஜா துவாரகனிடம் கேட்டபோது கலையோடு மட்டும் இருக்க முடியாது என அவர் சொன்ன பதில் அவரின் தூர நோக்கை காட்டியது. கலைத்துறையில் இருப்பவர்கள் சிறப்பாக முன்னேறுகின்ற பொழுது ஒருவேளை பெரும் புகழைச் சம்பாதிக்க முடியும் ஆனால் ஒருபோதும் பெரும் பணத்தை சம்பாதிக்க முடியாது. இளவயதிலேயே வாழ்க்கையின் தத்துவத்தை இவர் நன்கு கற்றுக்கொண்டுள்ளார் என உணர்ந்தேன்.

நிறைவாக திரு திருமதி தருமராஜா பாமா தம்பதிகளையும் அவர்களின் சிரேஸ்ர புதல்வன் செல்வன் தருமராஜா துவாரகன் அவர்களையும் குருநாதர் மிருதங்க ஞானவாரி இசைமாணி திரு.சி.துரைராசா அவர்களையும் வாழ்க வளமுடன் என வாழ்த்துகிறேன் - பாராட்டுகிறேன்.

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**
*இயக்குநர்,*
*பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்*
*ஊடக விரிவுரையாளர்,*
*யாழ் பல்கலைக்கழகம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



சி. துரைராசா அவர்களின் மாணவர் த.துவாரகன் அவர்களின் அரங்கேற்றம் என்பது எனக்கு மிகையில்லா அளவுகடந்த சந்தோசத்தை அளிக்கின்றது. ஆரம்பம் முதல் இன்றுவரை அவருக்கு ஊக்கமளித்து இன்று அவர் அரங்கேறுவதற்கு நானும் காரணமாக உள்ளேன் என் பது நினைத்துக்கூட பார்க்கமுடியாது உள்ளது. ஓர் ஆலயத்தை புனரமைத்து பரிவார மூர்த் திகளுடன் கும்பாபிஷேகம் செய்வதுபோல் குருவானவர் சி.துரைராசா அவர்களால் மிருதங்க அரங்கேற்றம் நிகழ்த்தப்படுகின்றது. இதற்கு பெற்றோர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு துணைப் பாடமான சங்கீதம் (வாய்ப்பாட்டை) ஆசிரியை சஜித் துஜிந்தன் சாயீஸ்வரி தற்போதைய கிராம அலுவலர் J/96 என்பவரிடமும் மேலத்தேய வாத்தியமான கீபோட். கரவீணா இசைமன்றம் S. ரஜீந்திரன் என்பவரிடமும் திருமறைக் கலாமன்றம் திரு. அற்புதன் திரு.யேசுதாசன் போன்ற ஆசிரியர்களிடமும் கற்று இன்று மிருதங்க அரங்கேற் றம் நடைபெறுகின்றது. ஒரு கலைஞனுக்குத் தேவையான நற்பண்புடன் மென்மேலும் சிறப்புடன் உயர எனது நல்வாழ்த் துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**S.இந்திரன்**
*ஆதீன கர்த்தா*
*சரவணை செல்லக் கதிர்காம முருகன் ஆலயம்*
*உரிமையாளர்,*
*இந்திரன் மிருதங்கத் தொழிலகம் யாழ்ப்பாணம்.*

## கலா ரசிகனின் வாழ்த்து



இலங்கைத் திருநாட்டில் தமிழர் பரந்து வாழும் நாடும் நகரமும் யாழ்ப்பாணமாகும். யாழ்ப்பாணர் தனது யாழினை மீட்டி இன்னிசை வழங்கியதால் மகிழ்வுற்றுப் பரிசாக வழங்கப் பட்டதுதான் யாழ்ப்பாணம் எனப்பெயர் பெற்றது. இயற்கையாகவே இசை மணமும் தமிழ் மணமும் கமழும் பிரதேசம் எனப் புகழ் பெற்ற ஊரிலே இசையார்வம் மிக்க திரு.தருமராஜா பாமா தம்பதிகளின் சிரேஸ்ர புதல்வன் - செல்வன் துவாரகன் சிறுபராயம் முதல் இசையின் மீதுள்ள அதீத விருப்பத்தினால் பல இசை மன்றங்களில் இணைந்து கீழைத்தேய, மேலைத்தேய வாத்தியங்களை மிகவும் லாவகமாகக் கையாளும் திறமை பெற்றுள்ளார். பல நிகழ்ச்சிகளுக்கு சுயமாகவே இசை அமைத்த பெருமை இந்தக் குறைந்த வயதிலேயே கிட்டியது இறைவன் கொடுத்த வரமாகும். மேலும் கலாவித்தகர் பட்டமும் பெற்றுள்ளமை இவரின் இசை ஞானத்திற்கு சான்று பகர்கின்றன.

தற்பொழுது யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ 1 ஆம் ஆண்டு மாணவனும் தேசிய மட்டத்தில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் சென்.ஜோண்ஸ் கல்லூரியை முதலிடம் பெறவைத்த பழைய மாணவனும் மிருதங்க லயஞானவாரி திரு.சி.துரைராசா அவர்களின் மாணவனுமாகிய "செல்வன் துவாரகனின் மிருதங்க அரங்கேற்றம் யாழ் வீரசிங்கம் மண் டபத்தில் 28.02.2016ல் சிறப்புற நடந்தேற எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

இதனைச் சிறப்புடன் நடாத்த தேசிய சமாதானப் பேரவை, யாழ்.மாவட்ட சர்வமத இணைப்பாளர், நல்லூர் மத் தியஸ்தர்சபை உறுப்பினர் என்ற பல்வேறு சமூக சேவைகளில் ஈடுபட்டுவரும் இவரின் தந்தையார் திரு.தருமராஜாவும் தாயார் சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய ஆசிரியை பாமா அவர்களின் பெருமுயற்சியும் பாராட்டுக்குரியவை.

இத்துறை ஏற்றம் வாய்ந்த செல்வன் துவாரகன் மிருதங்க வாசிப்பில் தனது கைவரிசையினைக் காட்டி மிருதங்க அரங்கேற்றம் களைகட்டி சபையினரின் பலத்த கரகோஷம் வானளாவ எட்டட்டும் என மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

**விநாயகமூர்த்தி ஸ்ரீசக்திவேல் J.P**
*தவிசாளர்*
*மத்தியஸ்தர் குழாம், யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்

கடவுள் வணக்கம்

செல்வன் தருமராஜா கிரிதரன்

வரவேற்புரை

திரு.ஜெயரட்ணம் நிக்ஷன்
பிரபல பல்துறை அறிவிப்பாளர்

தலைமையுரை

சர்வசமயக்குருமார்களிடம் ஆசி பெறல்

குரு வணக்கம்

கலைஞர் கௌரவிப்பு

இசை அரங்கு

பிரதம விருந்தினர் உரை

சிறப்பு விருந்தினர் உரை

கௌரவ விருந்தினர் உரை

மதிப்பீட்டுரை

திரு.சண்முகலிங்கம் நாகராஜன்
முதுதத்துவமாணி லயவிஷாரதா
(சென்னை தமிழ்நாடு இந்தியார்)

நன்றியுரை

செல்வன் தருமராஜா துவாரகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்க உருப்படிகள்

| உருப்படி | இராகம் | தாளம் | இயற்றியவர் |
|---|---|---|---|
| தானவர்ணம் | கம்பீரநாட்டை | ஆதி | தவமைந்தன் |
| ஸ்ரீவாதாபி | சஹானா | ஆதி | பாபநாசம்சிவன் |
| கந்தனை | நாசிகாபூசணி | மிஸ்ரசாபு | தவமைந்தன் |
| எந்தவேடு | சரஸ்வதிமனோகரி | ஆதி | தியாகராஜர் |
| இராகம் தானம் பல்லவி | கல்யாணி | ஆதி | சி.துரைராசா |
| ஓம் நமோ நாராயண | கருணாரஞ்சனி | கண்டசாபு | அம்புஜம் கிருஷ்ணா |
| சொல்ல வல்லாயோ | இராகமாலிகை | ஆதி (திஸ்ரநடை) | பாரதியார் |
| தில்லானா | சுமநீசரஞ்சனி | ஆதி | தவமைந்தன் |
| திருப்புகழ் | சந்ரகௌன்ஸ் | சந்ததாளம் | அருணகிரிநாதர் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்க அணிசேர் கலைஞர்கள்



## பாட்டு

**தவமைந்தன் தவநாதன் றொபேட்**

ஈழத்தமிழரின் செவ்வியல், நாட்டார் கலைகள் அனைத்திலும் ஆழக் கால்பதித்திருக்கும் ஆற்றுகையாளரான திரு.தவநாதன் றொபேட் அவர்கள் இசையமைப்பாளராக, பாடகராக, கருவியாளராக, எழுத்தாளராக விமர்சகராக, ஆய்வாளராகத் திகழ்ந்து வருகின்ற யாழ். பல்கலைக்கழக இசைத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் ஆவார்.



## வயலின்

**சுருதிவேந்தன் அ.ஜெயராமன்**

கலைக் குடும்பத்தில் தோன்றிய சுருதிவேந்தன் அ.ஜெயராமன் அவர்கள் ஈழத்தின் ஒலிப்பதிவுத் துறையில் நீண்டகால அனுபவ முதிர்ச்சி கொண்டவராகவும் இசை, நடன, மிருதங்க அரங்கேற்றங்களிற்குரிய சிறந்த பக்கவாத்தியக் கலைஞராகவும் தனியான வயலின் இசையரங்குக் கலைஞராகவும் திகழ்ந்து வருகின்றார்.



## கடம்

**குமாரசாமி ரவிசங்கர்**

மிருதங்கக் கலாவித்தகரான கு.ரவிசங்கர் அவர்கள் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவர் ஆவார். எண்ணற்ற ஆற்றுகைகளிலும் அரங்கேற்றங்களிலும் மிருதங்கம், கடம் போன்ற கருவிகளை நுட்பமாகக் கையாண்டு வரும் அர்ப்பணிப்பு மிக்க வளர்ந்துவரும் இளம் கலைஞரான இவர் கடத்தின் நுட்பங்களை தமிழகக் கலைஞர் கலாநிதி எஸ்.கார்த்திக் அவர்களிடம் முறைப்படி கற்றுக் கொண்டவர் ஆவார்.



## கஞ்சிரா

**பத்மநாதன் சியாம்கிருஷ்ணா**

புவியியல் துறையில் கலைமாணிப்பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட சியாம்கிருஸ்ணா அவர்கள் மிருதங்க ஞானவாரி சி.துரைராசா அவர்களிடம் மிருதங்க இசையைப் பயின்று கலாவித்தகர் பட்டத்தினை பெற்றுக் கொண்டார். மிருதங்கம் மட்டுமன்றி பல்வேறு நிகழ்வுகளில் வயலின் , கெஞ்சிரா, தபேலா போன்ற வாத்தியக் கருவிகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி வருகிறார்.



## முகர்சிங்

**கந்தசாமி நந்தகுமார்**

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த கலாவித்தகர் கந்தசாமி நந்தகுமார் கலாபூசணம் ம.சிதம்பரநாதன் அவர்களின் மாணவரான இவர் மிருதங்கம் மட்டுமன்றி இதர வாத்தியங்களாகிய கஞ்சிரா, முகர்சிங் போன்ற வாத்தியங்களையும் வாசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இசைக்கச்சேரிகளில் மட்டுமன்றி நாட்டிய நிகழ்வுகளிலும் மிருதங்கத்தில் தனியிடம் பெற்று வருகின்றமை வரவேற்கத்தக்கது.



## தம்புரா

**கந்தசாமி ரஜீவன்**

நுண்கலைமாணிப் பட்டம் பெற்றிருக்கும் கந்தசாமி ரஜீவன் அவர்கள் யாழ்.மத்திய கல்லூரியில் இசை ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். அர்ப்பணிப்புடன் மாணவர்களை இசையாளர்களாக உருவாக்கி வருகின்ற இவர் கடந்த பல ஆண்டுகளாக இசைக் கலையில் ஈடுபட்டு வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

பெற்றோராகிய நாம் இவரைத் தனக்கெனத் தெரிந்துகொண்டு தத்தெடுத்த கலைத் தாயின் பாதங்களை வணங்கி கடந்த காலங்களில் எம்மண்ணில் நடைபெற்ற மனித அவலங்கள் மத்தியிலும் எமது கலை கலாசாரப் பண்பாடுகளை அழியாது பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கும் கொடுக்க வேண்டும் என்னும் உயரிய நோக்குடைய கலை ஆசான்களுக்கும். சமயக்குருமார்களுக்கும் பெரியோர்களுக்கும் எமது குடும்பத்தினர்கள் சார்பாக இதய பூர்வமாக நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எதிர்வரும் காலங்களிலும் எமது கலைகளையும் இந்தக் கலைஞனையும் பாராட்டி வாழ்த்தி ஊக்குவிக்கும் கலை ஆர்வலர்கள் நண்பர்கள் எமது மண்ணின் பாரம்பரிய கலைகள் மீண்டும் செழித்தோங்க ஒன்று பட்டுச் செயற்பட வேண்டும் என அன்பாகக் கேட்டுக்கொண்டு இந்த மிருதங்க அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு நேரடியாக வருகைதந்தும், சிறப்பாக இதற்கென தூர தேசங்களில் இருந்து வருகைதந்தவர் களுக்கும் ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்திகளை வழங்கியவர்களுக்கும் மற்றும் எம்முடனே நின்று சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நேரடியாக வந்து கலந்து கொள்ள முடியாவிட்டாலும் தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பம் சார்பாக உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*"கலை இன்பமே நிலை இன்பம்*
*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"*

இங்ஙனம்


**திரு. திருமதி ஜெ.தருமராஜா - பாமா குடும்பத்தினர்**
இல. 43, கலைவாணி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

T. Thuvarakan
Vanavil Jaffna
Thuvarakan Tharumarajah
rainbowmusicgrp@gmail.com
0779110166




தம்பி தங்கையுடன்



அப்பா அம்மாவுடன்



அம்மம்மா அம்மப்பாவுடன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org